**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் நாள் புதன்கிழமை

**I.A.No.02/2025 in OS.No.400/2021**

**TNTM03000745/2021**

1. சர்தார்
2. முன்னி ... மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள்

/எதிராக/

1. வெங்கடேசன் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. பூங்கொடி
3. மதன்குமார்
4. சந்தோஷ்குமார் ... 2,3,4எதிர்மனுதாரர்கள் /1,2,3 பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 12.02.2026ஆம் தேதி அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.அரிஸ்டாட்டில்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சுப்பிரமணியன்,B.A.,BL., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்று வழக்கில் குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 3(A) ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி, பிரதிவாதி தரப்பு சாட்சி–1 ஆவார். 5ம் பிரதிவாதி மனுதாரருடைய மனைவி ஆவார். வாதி வழக்குச் சொத்தின் மீது அடமானக் கடனை வசூலிக்க இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு விசாரணைக்கு போடப்பட்டு நிலுவையில் உள்ளது. மனுதாரர் பதிலுரை தாக்கல் செய்யும் போது சில முக்கிய அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாமல்

விட்டுவிட்டார். தற்போது தான் மனுதாரருக்கு ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் கிடைத்தது. இத்துடன் தாக்கல் செய்யும் கணினி சிட்டா, வில்லங்கசான்று சான்றிட்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறார். அதனை ஏற்று வழக்கில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகிறது. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்று வழக்கில் குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் மூன்று ஆவணங்களை ஏற்க கோரி தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். இவ்வெதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாமாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிரத்து ஏனையவற்றை மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்கள். மனுவில் 04.02.2022 தேதியிட்ட கணினி சிட்டா என்பது வழக்கு நிலுவையில் இருக்கும்போது பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆவணமாகும். 11.10.2011 வில்லங்க சான்றிதழ் 11.10.2011ல் பெறப்பட்டதாகும். வழக்கு தாக்கல் செய்தது 2021ம் ஆண்டாகும். 3வது ஆவணம் 12.04.2019 பைசல் ரசீது சான்றிட்ட நகல் அதனை கால தாமதமாக தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை. மேலும் மனுதாரர்கள் தரப்பில் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யாமலேயே மனு மட்டும் தாக்கல் செய்திருப்பது தள்ளுபடிக்கு உகந்ததாகும். மனுதாரர் மனுவிற்கு முகாந்திரம் கிடையாது. மனுதாரரின் மனுவினை செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர்/வாதி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவேன்றால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. **பிரச்சனைக்கான தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கு அடமான கடன் தொகை வசூல் செய்ய 1ம் எதிர்மனுதாரர்/வாதியால், பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் விடுபட்டுவிட்டது என்றும், தற்போதுதான் மனுதாரர்களுக்கு ஆவணங்கள் கிடைத்தது என்றும், அந்த ஆவணங்களை மனுதாரர் தரப்பில் ஆவணங்களாக ஏற்க அனுமதிவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 04.02.2022 தேதியிட்ட கணினி சிட்டா இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஆவணமாகும். 11.10.2011 தேதியிட்ட வில்லங்க சான்று இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பெறப்பட்ட ஆவணமாகும். 12.04.2019 தேதியிட்ட பைசல் ரசீது எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் தற்போது காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்த மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை நிரூபணம் செய்ய இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அவசியம் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கை தீர்வு காண்பதற்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால், 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்க்கும்படி இல்லை என்றாலும், மனுதாரர்கள் தங்களது தரப்பு எதிர்வழக்கை நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பினை அளிக்கும் பொருட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKAREN S Digitally signed by BASKARAN S Date: 2026.03.04 15:35:10 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

__மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:__ இல்லை

__எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:__ இல்லை

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2026.03.04 15:35:17 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

I.A.No.2 of 2025 in OS.No.400 of 2021